ராணி காமிக்ஸ்
ஜேம்ஸ்பாண்டு 007
திடீர் தாக்குதல்
ரூ. 5
மரணப் பிடியில் மாட்டிய மங்கை

பள்ளிக்குச் செல்லடி!

அடி எடுத்து வையடி - நீ
அறிவுக் கூடம் செல்லடி!
அறிவை மெல்லப் பெருக்கடி - அதில்
ஆர்வமாக நில்லடி!

துடிப்போடு வாழடி - நல்ல
தோழியோடு சேரடி!
துவண்டு போவதேனடி - உன்
துணிவுக்கு இணை ஏதடி?

படிப்பில் ஆர்வம் கொள்ளடி - வீண்
பகட்டு மோகம் தள்ளடி!
பகையை என்றும் வெல்லடி - இதை
பாருக்கெடுத்துச் சொல்லடி!

—மு. முகையதீன், உளுந்தூர்ப்பேட்டை.

ராணி காமிக்ஸ் – 455
(மாதம் இருமுறை இதழ்)
ஜூன் 1, 2003.

ஜேம்ஸ் பாண்டு 007

திடீர் தாக்குதல்

மரணப் பிடியில் மாட்டிய மங்கை

மும்பையில் மலை மீது பார்சிகளின் இடுகாடு. அங்கு ஒரு உடலைக் கொண்டுபோனார்கள்.
உள்ளே போய் உடலை இறக்கி வைத்தார்கள். அது ஒரு இளம்பெண்ணின் உடல்.
விலகுங்கள்! கழுகு வரட்டும்!!
உடலைக் கொண்டுவந்தவர்கள் கலைந்து போனார்கள்.
பாஸ்! கழுகுகள் வருகின்றன!
நாங்கள் ஜேம்ஸ்பாண்டு வருகைக்காகக் காத்திருக்கிறோம்!
ஜேம்ஸ்பாண்டு வந்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிவிடுவாரா, என்ன?
பெய்ரூட்டிலிருந்து மும்பை வரை அந்தப் பெண்ணை ஜேம்ஸ்பாண்டு தொடர்ந்து வருகிறார்!

மயக்க மருந்து கொடுக்கப்பட்ட அந்தப் பெண், திடீர் என்று விழித்துப் பார்த்தாள் !
என்னைக் காப்பாற்றுங்கள் !
அவளைக் கொத்தித் தின்னக் கழுகுகள் கூட்டம் கூட்டமாக வந்தன !
அந்தப் பெண்ணின் உடல் அசைவு கண்டு கழுகுகள் கொத்தப் பயந்தன !
மலை அடிவாரத்தில் கொலைகாரர்கள் காத்திருந்தனர்.
ஜேம்ஸ்பாண்டு எந்த வழியே வருவார்?
மலை உச்சிக்குப் போக இதுதான் ஒரே வழி !
ஜேம்ஸ்பாண்டு ஹெலிகாப்டரில் வந்து, மலை உச்சியில் இறங்கினார் !

ஹெலிகாப்டரைப் பார்த்து கழுகுகள் பயந்தன!
என்னைக் காப்பாற்றுங்கள்!
அவள் அரை மயக்கத்தில் இருந்தாள்.
யாரோ வருவது போலத் தெரிகிறதே!
ஜேம்ஸ் வந்துவிட்டார்! அந்தப் பெண்ணைத் தூக்கிப் போய் விடுவார்!
அந்தப் பெண்ணை ஜேம்ஸ் விடுவித்தார்!
என்னைக் கட்டிப் பிடித்துக்கொள்!

சுட்டு வீழ்த்துங்கள் !
டுமீல்...!
டுமீல்...!
ஜேம்ஸ் பறந்தார் !
ஜேம்ஸ் தப்பினால் பாஸ் நம்மைக் கொன்று விடுவார் !
துப்பாக்கிக் குண்டுகள் எட்டாத உயரத்துக்கு ஜேம்ஸ் பறந்துவிட்டார் !
இனி பயமில்லை !

அதேநேரம் மும்பை விமான நிலையத்தில்...
ஏர் ஓரியண்டு ஜெட் விமானம் ஆபத்தில் இருக்கிறது!
அதன் சரக்குக் கிடங்கில் தீப்பற்றிக் கொண்டது!
விமானம் முழுக்கத் தீ பரவியது!
வெடித்தது போல ஒரு பெரிய சத்தம்... அதோடு தொடர்பு அறுந்துவிட்டது!
பாஸ்! விமானம் நடுவானில் தீப்பிடித்து வெடித்துச் சிதறிவிட்டது!
பலே... பலே...

விமானம் தீப்பற்றி எரிந்ததை ஒரு கப்பல்படைக் கப்பல் பார்த்திருக்கிறது. ஆனால், எதுவும் செய்ய முடியவில்லை!
லண்டன் இரகசிய போலீஸ் தலைமை நிலையம்.
தொடர்ந்து ஐந்தாவது விமான விபத்து இது.
நாங்கள்தான் விமானத்தில் வெடி வைத்தோம் என்று எபிலி தீவிரவாதிகள் அறிவித்திருக்கிறார்கள்.
நல்லவேளை, 007 இப்போது மும்பையில்தான் இருக்கிறார். அவர் நல்ல செய்தி கொண்டுவருவார்!
மும்பை ஓட்டல் அறையில்...
என்னைக் காப்பாற்றியதற்கு எப்படி நன்றி கூறுவேன்?
நீதானே பாத்திமா?
நான்தான் பாத்திமா! என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?
எங்கள் கோப்புகளில் உன் பெயர் இருக்கிறது!

என் பெயர் ஜேம்ஸ்பாண்டு!
லண்டன் இரகசிய போலீஸ்! நீங்கள்தான் என்னைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறீர்களே!

எபிலி தீவிரவாதிகளைப் பற்றி ஏதாவது துப்புக் கிடைக்குமா என்றுதான்!
எபிலி தீவிரவாதிகளுடன் எனக்கு எந்தத் தொடர்பும் கிடையாது!

நீ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவள்தானே?
எனக்கு எந்த இயக்கத்தோடும் தொடர்பு கிடையாது!

விமானங்களை வெடி வைத்துத் தகர்க்கும் அவர்களை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்!
ஓ...
ஆனால், தீவிரவாதிகள் ஏன் விமானங்களை வெடி வைத்துத் தகர்க்க வேண்டும்?
வேறு யார் இந்தக் கொடுமையைச் செய்வார்?
மாபியா கூட்டம் இருக்கிறதே! அவர்களுக்குள் தொழில் போட்டியும் உண்டு!!
உனக்குத் தீவிரவாதிகளுடன் தொடர்பு இல்லையென்றால், மும்பைக்கு ஏன் வந்தாய்?
வேலை தேடிக்கொண்டிருந்த என்னை ஒரு ஏஜண்டு இங்கே அனுப்பி வைத்தான்!
யாரைப் பார்க்கச் சொன்னான்?
மில்லர் என்பவனைச் சந்திக்கச் சொன்னான். அவன் முகவரிகூட என்னிடம் இருக்கிறது!

மில்லரைச் சந்திக்க இருவரும் வந்தார்கள்.
மில்லர் முதல் மாடியில் வசிக்கிறார்!
இருவரும் படி ஏறினார்கள்.
ஒரே இருட்டாக இருக்கிறதே! சுவிட்ச் எங்கே இருக்கிறது?
விளக்குப் போட்டதும் பாத்திமா அலறினாள்!
ஆ...!
பயப்படாதே, பாத்திமா!
அறைக்குள் ஒருவன் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான்.
அவர்தான் மில்லர். யார் கொலை செய்தது?
புலி அடித்தது போலத் தெரிகிறதே!

புலியின் கால் தடம்தான்!
இதோ கால் தடம்!
திடீர் என்று விளக்கு அணைந்தது
ஜேம்ஸ்! மீண்டும் இருட்டு!!
எங்காவது 'பியூஸ்' போயிருக்கும்!
இருட்டில் புலி உறுமும் குரல் கேட்டது.
ஜேம்ஸ்! நாம் புலிக் கூண்டுக்குள் சிக்கிக் கொண்டோம்!
இங்கே ஒரு நாற்காலி கிடந்ததே!
ஜேம்ஸ் நாற்காலியைக் கையில் எடுத்துக்கொண்டார்.
என் பின்னேயே வா!

என்னை ஒட்டி வா. பாத்திமா. மாடிப் படிக்குப் போய்விட்டால், பிறகு பயமில்லை!
புலி உறுமுது... பக்கத்தில்தான் பதுங்கி இருக்கிறது போலிருக்கிறது!
ஜேம்ஸ் சுட்டார்!
டுமீல்...
புலி செத்து விட்டதா?
பொறு! என் லைட்டரை 'ஆன்' பண்ணுகிறேன்!
புலி ஓடுவதுபோல சத்தம் கேட்கிறதே? ஏதோ கீழே விழுந்தது போலவும் சத்தம்!

இதோ
இதுதான்
இங்கே ஏது குட்டி
டேப்ரிகார்டர்?
ஜேம்ஸ் அதை 'ஆன்'
பண்ணினார்!
அட! இந்த
டேப்பிலிருந்துதான் புலி
உறுமல் வந்திருக்கிறது!
இருவரும் வெளியே வந்தார்கள்.
ஏதோ குனிந்து
எடுத்தீர்களே?
மில்லர் கையில்
ஒரு துண்டுச்சீட்டு
இருந்தது

இருவரும் வீதிக்கு வந்துவிட்டார்கள்.
உங்களுக்குக் கையில் காயம்பட்டதே? நான் காரை ஓட்டுகிறேன்!
பாத்திமா காரை ஓட்டிப் போனாள்.
சீட்டைப் பார்த்தீர்களா?
மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தபோது, மில்லர் ஏதோ கிறுக்கியிருக்கிறான்!
துண்டுச் சீட்டில்—
குலிராயா
வெறும் காகிதப் புலி! உங்களுக்கு எப்படிக் காயம்பட்டது?
கொலைகாரன் கையில் புலி நகம் அணிந்திருக்கக்கூடும்!
குலிராயா... இதற்கு என்ன பொருள் என்று தெரிகிறதா?
நிச்சயம் ஆங்கிலச் சொல் அல்ல. ஏதாவது இந்திய மொழிச் சொல்லாக இருக்கக் கூடும்!
இந்திய அதிகாரிகளிடம் கேட்போம்!

இந்திய இரகசியப் போலீஸ் அதிகாரி ஒருவரை ஜேம்ஸ்பாண்டு சந்தித்தார்.
வாங்க. ஜேம்ஸ்பாண்டு 007!
உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி, இந்திரஜித்.
எபிலி தீவிரவாதிகளைத் தேடி நான் மும்பைக்கு வந்தேன்!
ஏர் ஓரியண்டு விமான விபத்துதானே?
அதுபற்றி நாங்களும் விசாரித்துக் கொண்டிருக்கிறோம்.
ஒரு சிறு துப்பு கிடைத்தது. இதைப் பாருங்கள்!
குலிராயா
அப்படியென்றால் என்ன பொருள்?


இவர் இந்தியாவிலுள்ள கோடீஸ்வரர்களில் ஒருவர்.
அவர் படம் இருக்கிறதா?
தேடிப் பார்க்கிறேன்!
இவர்தான் குலிராயா. ஒரு பத்திரிகையில் வெளிவந்த படம், இது.
அவருக்குப் புலிதான் வளர்ப்புப் பிராணியா?
ஆச்சரியந்தான்! ஆனால், அதைவிட இன்னும் ஒரு ஆச்சரியம்!
ஆமாம். அவர் மைசூர்க்காரர் என்பார்கள். கன்னட மொழியில் குலிராயா என்றால், புலி என்று பொருள்!

குலிராயாவைப் பார்த்தால் மைசூர்க்காரர் போலத் தெரியவில்லை!
வேறு ஊர்க்காரராகவும் இருக்கலாம்!
அவர் கையைப் பாருங்கள்.
கையில் என்ன?
கையில் ஏன் கறுப்புக் கையுறை அணிந்திருக்கிறார்?

லண்டன் இரகசியப் போலீஸ் தலைமை நிலையம்.
குலிராய்ா என்ற பெயர் இருக்கிறதா, பார். மும்பையிலிருந்து 007 கேட்கிறார்.
பார்த்துக்கொண்டிருக்கிறோம், ஜேம்ஸ். அதற்குமுன் ஒரு செய்தி. புலியால் அடித்துக் கொல்லப்பட்டது மில்லர் மட்டுமல்ல; இன்னும் பலர்!
நீங்கள் கேட்ட விவரம். குலிராயாவுக்கு சொந்தமான ஒரு கப்பல்; 'திப்பு' என்று பெயர். அதை கடற்படைக் கப்பல் பார்த்திருக்கிறது.
எங்கே பார்த்தார்கள்? எப்போது பார்த்தார்கள்?
அந்தக் கப்பல் மும்பையை நோக்கிப் போய்க்கொண்டிருந்திருக்கிறது. இப்போது மும்பைத் துறைமுகத்தில் நிற்கக்கூடும்!

ஜேம்ஸ் மும்பைத் துறைமுகத்துக்கு வந்தார்.
நான் லண்டன் டைம்ஸ் நிருபர். குலிராயாவைப் பேட்டி காணவேண்டும்.
பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வந்தார்.
குலிராயா இப்போது இங்கே இல்லையே?
இப்போதுதான் மும்பைக்குத் திரும்பினார் என்று கேள்விப்பட்டேனே?
ஆமாம், வந்தார். ஆனால், உடனே எங்கோ கிளம்பிவிட்டார், அவரது விமானத்தில்!
அவரைப் பற்றி ஒரு பக்கம் எழுதப்போகிறேன். கப்பலைச் சுற்றிப் பார்க்கலாமா?

அங்கேயெல்லாம் போகக்கூடாது! வெளியேறுங்கள்!
நான் சொல்லுவது கேட்கவில்லையா?
இரண்டு படம் எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்!
பாதுகாப்பு அதிகாரி கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்.
வெளியே போ!
ஒரே குத்து!
ஆ...!

மாலுமிகள் ஓடிவந்தார்கள்.
இவனைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்!
ஏன் வீணாகக் கோபப்படுகிறீர்கள்?
அந்த ஆளைத் தாக்கும்போது நான் புலி நகம் அணியவில்லையே என்று சந்தோசப்படுங்கள்!
ஜேம்ஸ் மீண்டும் இந்திரஜித்தைப் பார்க்க வந்தார்.
விமான நிலையத்தில் விசாரித்தீர்களா?
ஆமாம். குலிராயாவின் ஜெட் விமானம் இன்று காலைதான் பறந்து போனது என்றார்கள்!
எங்கே பறந்திருப்பார்?
அதைக் கண்டுபிடித்துவிடலாம். விமானம் எங்கே போகிறது என்பதை பைலட் விமான நிலையத்தில் பதிவு செய்திருப் பார்.
இந்திரஜித் விமான நிலையத்தில் விசாரித்தார்.
குவைத்!


ஜேம்ஸ், பாத்திமா இருவரும் விமான நிலையத்துக்கு வந்தார்கள்.
குவைத்தில் எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள்.
ஆனால், எச்சரிக்கையாக இரு. அவன் பூனையல்ல, புலி!

இது என் லண்டன் டெலிபோன் நம்பர்!
ஒரு பெண் முதலில் எடுப்பாள். பிறகு என்னைக் கூப்பிடுவாள்.

ஜேம்ஸ் லண்டனுக்குத் திரும்பினார்.
குலிராயா பற்றி பல திடுக்கிடும் தகவல்களை சேகரித்துவிட்டோம்!

குலிராயாவுக்கு ஏகப்பட்ட வியாபாரம் இருக்கிறது. கப்பல்... எண்ணெய்... இரும்பு...
மாபியா கூட்டத்துடன் அவருக்குத் தொடர்பு இருக்கிறதா?
விபத்துக்கு உள்ளான விமானங்களில் பயணம் செய்த பயணிகளின் பட்டியலைப் பார்த்தால், ஒரு ஒற்றுமை தெரிகிறது.
பெரிய கப்பல் அதிபர்கள் அல்லது எண்ணெய் கிணற்றுக்காரர்கள். தொழிலில் குலிராயாவுக்குப் போட்டிக் காரர்கள்!
எபிலி தீவிரவாதிகள் என்ற திரையில் குலிராயா இத்தனையும் செய்கிறாரா?
புலி நகக் கொலையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்!

குலிராயாவின் கப்பலின் பெயர் என்ன சொன்னீர்கள்?
திப்பு... அப்படி யென்றால்?
மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் பெயர், அது. திப்புவை மைசூர் புலி என்பார்கள்.
குலிராயா தன்னையும் புலி என்று நினைத்துக் கொண்டாரோ?
ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்.
குலிராயா மைசூர்க்காரர்களைப் போல இல்லையே!
படத்தைப் பாருங்கள். சீன உடை அணிந்திருக்கிறார்!
மர்மத்துக்கு மேல் மர்மமாக இருக்கிறதே!


அடுத்த கேள்வி–
கையில் கறுப்புக் கையுறை அணிந்திருப்பது ஏன்?
கையில் ஏதாவது குறை இருக்கக்கூடும்.
இருக்கலாம்.
அல்லது, கையே இல்லையோ என்னவோ!
என்ன சொல்லுகிறீர்கள், ஜேம்ஸ்?
கையில்லாமல், செயற்கைக் கை பொருத்தி இருக்கலாமே?
இருக்கலாம்! இருந்தால்...?
தலைக்கு விக் வைத்திருப்பதைக் கவனியுங்கள்!

வழுக்கைத் தலையாக இருக்கும்!
சீன உடை — செயற்கைக் கை — வழுக்கைத் தலை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துப் பாருங்கள்!
யாராக இருக்கக்கூடும்?
டாக்டர் நோ!
அட பைத்தியமே! டாக்டர் நோவை நீங்கள்தானே கொன்றீர்கள், 007!
கொன்றுவிட்டதாக நினைத்தேன்! பிழைத்திருக்கவும் வாய்ப்பு உண்டு!
டாக்டர் நோதான் இந்த குலிராயா என்று நான் நினைக்கிறேன்.
007, உங்களுக்கு ஒரு போன்!
உங்கள் இரகசிய டெலிபோன் நம்பருக்கு வந்திருக்கிறது!

யார் பேசியது?
ஒரு பெண்ணின் குரல் கேட்டது!
பேசுவது யார் என்று சொன்னார்களா?
ஓ... பாத்திமா... இணைப்புக் கொடுங்கள்!
ஜேம்ஸ்... குலிராயாவின் விமானம் மொராக்கோவுக்குப் பறந்துவிட்டது!
மொராக்கோவில் தங்கியிருக்கிறாரா?
ஆமாம். 'புலிக்கூண்டு' என்ற மாளிகையில் தங்கியிருக்கிறாராம்!

அப்போது ஒரு கை...
ஆ...!
குலிராயா மொராக்கோவுக்குப் போய்விட்டாராம்! இப்போதுதான் தகவல் வந்தது.
அவரது மொராக்கோ தொடர்பு பற்றி ஏதாவது தகவல் இருக்கிறதா?
அவரது தலைமை நிலையம் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லையே!

எல்லாவற்றையும்விட, விமானங்கள் எப்படி வெடித்துச் சிதறுகின்றன என்பது தெரிய வேண்டும்!
எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது.
என்ன, சொல்லுங்கள்.
ஜான்சன் ஒரு அமெரிக்க விஞ்ஞானி– ராக்கெட்டுகள் தயாரிப்பதில் நிபுணர். அவரைத் திடீர் என்று காணோம்.
சரி. பிறகு?
அவர் இப்போது மொராக்கோவில் இருப்பதாகத் தகவல்!
குலிராயாவும் அங்கேதான் போயிருக்கிறார்!


இரண்டுக்கும் தொடர்பு இருக்கக்கூடும்!
இன்னும் ஒரு தகவல். ஜான்சன் இப்போது இருக்கும் முகவரி நமக்குக் கிடைத்திருக்கிறது.
நான் மொராக்கோ போகிறேன் அல்லவா? விசாரிக்கிறேன்!
மறுநாள் ஜேம்ஸ்பாண்டு மொராக்கோவுக்குப் பறந்தார்.
அதோ ஜேம்ஸ்!
வெளியே வந்தார்கள்.
நாங்கள் பாத்திமாவின் நண்பர்கள்!
பாத்திமா எங்கே?

உங்களுக்கு போன் செய்தது முதலே பாத்திமாவைக் காணவில்லை !
எங்கே போயிருப்பாள் !
புலிக்கூண்டு மாளிகை என்று ஏதோ சொன்னாளே? அங்கே போய்ப் பார்ப்போம் !
இந்த முகவரி தெரிகிறதா, பாருங்கள்.
கொடுங்கள், பார்க்கிறேன் !
இதுவும் அந்த புலிக்கூண்டு மாளிகைதான்
இதுதான் புலிக்கூண்டு மாளிகை !

விஞ்ஞானி ஜான்சன் இருக்கிறாரா?
நீங்கள் யார்?
அவருடைய நண்பன்!
உள்ளே வாருங்கள்
வருகிறவர்களைக் க்ண்காணிக்க டி.வி.கூட வைத்திருக்கிறீர்களே?
இந்தப் புலிதான் எங்களுக்குப் பாதுகாப்பு!

பாஸ், ஜான்சனைப் பார்க்க ஜேம்ஸ்பாண்டு வந்திருக் கிறார்.
இப்போது ஒன்றும் கலாட்டா வேண்டாம்!
நகராதீர்கள்! அப்படியே நில்லுங்கள்! உங்களைப் பார்க்க எங்கள் பாஸ்சின் செயலாளர் வருகிறார்!
செயலாளர் வந்தார்.
ஜான்சன் வேலையை விட்டுப் போய் வெகுநாளாகிவிட்டதே!
எங்கே போனார்?
எங்களுக்குத் தெரியாது! நீங்கள் கிளம்புங்கள்! உங்களைப் பார்த்து டைகர் கோபப் படுகிறது!
ஜேம்ஸ் திரும்பி வந்தார்.
கோபப்படாதே! கிளம்பு! வேறொரு திட்டம் இருக்கிறது!


அன்று இரவு— சாலையில் போக்குவரத்து மறிக்கப்பட்டது.
சாலையில் வேலை நடந்தது. துளை போடும் கருவியின் இரைச்சல் காதைப் பிளந்தது—
அதே நேரம்—
ஜேம்ஸ்பாண்டு புலிக்கூண்டு மாளிகையில் ஹெலிகாப்டரில் போய் இறங்கினார்!

ஜேம்ஸ்பாண்டு உள்ளே விரைந்தார்
பாத்திமா இங்கேதான் இருக்க வேண்டும்!

ஒரு அறையில் பாத்திமா கட்டி வைக்கப்பட்டிருந்தாள்.
பாத்திமா!

ஜேம்ஸ் அவளது கட்டுகளை அவிழ்த்தார்!
உங்களை எந்த நேரமும் எதிர்பார்த்தேன் ஜேம்ஸ்!

அப்போது ஒரு புலி உறுமிக்கொண்டு வந்தது!
இது மெய்யான புலி, ஜேம்ஸ்!
இந்தத் துப்பாக்கியை நீ வைத்துக்கொள்! ஒரு மூலையில் போய் நின்று கொள். தேவைப்படும்போது பயன்படுத்து.
நீங்கள்?
நான் ஒரு வேலை செய்கிறேன்!

ஜேம்ஸ் திரைச்சீலையில் தீ வைத்தார்!
புலி பாய்ந்தது!
கொர்...ர்...ர்...
தீப்பிடித்து எரிந்த, திரைச்சீலையை புலி மீது எறிந்தார், ஜேம்ஸ்!

கதவுப் பக்கம் போ, பாத்திமா!

ஓடு!

இருவரும் தப்பி ஓடினார்கள்!
தீக்கு அடியில் புலி சிக்கிக் கொண்டது!


புலியிடமிருந்து நாம் தப்பிப்போம் என்று நினைக்கவேயில்லை, ஜேம்ஸ்.

புலி உறுமியது... நீ மூன்றுமுறை சுட்டாய்... யாருமே ஓடிவரவில்லையே?
ஆட்கள் இருந்தார்களே?
இப்போது நான், நீ, புலி தவிர வேறு யாரும் இங்கேயில்லை என்று நினைக்கிறேன்! காலி செய்துகொண்டு போயிருக்கக்கூடும்!
குலிராயா தப்பிவிட்டான் என்று நினைக்கிறேன்.
எப்படி?
பாஸ் கப்பலில் கிளம்பிவிட்டார் என்று அவருடைய செயலாளர் யாரிடமோ சொன்னது என் காதில் விழுந்தது!

ஓட்டல் அறைக்கு வந்தார்கள்
ஜேம்ஸ்! துறைமுகத்திலிருந்து கிளம்பிய கப்பல்களின் பட்டியல், இது
இந்தக் கப்பலாக இருக்க வேண்டும்.
எந்தக் கப்பல்?
சிர்கான் என்ற எண்ணெய்க் கப்பல்

எப்படிச் சொல்லு கிறீர்கள்?
'சிர்கான்' என்றால் புலி என்று பொருள்! ஜிப்ரால்டருக்குக் கிளம்பிப் போய்க்கொண்டிருக்கிறது!
கடலில் கப்பல் போய்க் கொண்டிருந்தது.
ஜேம்ஸ்பாண்டை பிறகு பார்த்துக்கொள்ளுவோம். அதைவிட அவசர வேலை இருக்கிறது!
வாஷிங்டனில் இருந்து ஏதாவது தகவல் உண்டா?
வெளிநாட்டு அமைச்சர் கிளம்புவது உறுதியாகி விட்டது!
ஜேம்ஸ் லண்டனுக்குப் பறந்தார்!


கப்பலை உடனே நிறுத்த வேண்டும். இல்லையேல், அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் போகும் விமானத்துக்கு ஆபத்து ஏற்படலாம்!

போர்க்கப்பலை அனுப்பி, அந்தக் கப்பலை நிறுத்தலாமே?
அது எப்படி முடியும்? அந்தக் கப்பலில் டாக்டர் நோ இருக்கிறார் என்பது உறுதியாகத் தெரியாமல்...! அப்படியே இருந்தாலும், விமான விபத்துகளுக்கு டாக்டர் நோதான் மூளை என்பதை நாம் நிரூபிக்க வேண்டுமே!

ஒரு எண்ணெய்க் கப்பல் எப்படி ஒரு விமானத்தை வீழ்த்துகிறது என்பது நமக்குத் தெரிந்தாக வேண்டுமே?

ஓ.கே.! எல்லாவற்றுக்கும் நான் முடிவு கட்டுகிறேன்!


ஜேம்ஸ் ஒரு கப்பலில் பயணமானார்.
இது வேகமாகச் செல்லும் கப்பல்!
எண்ணெய்க் கப்பலை நெருங்கியதும்...
லைப்போட்டுக்கு நான் மாறிக்கொள்ளுகிறேன்!
ஜேம்ஸ்பாண்டு லைப்போட்டுக்கு மாறினார்.
கப்பல் மூழ்கி, நீங்கள் லைப்போட்டில் தப்பித்தது போல நடிக்க வேண்டும்!

ஜேம்ஸ் எண்ணெய்க் கப்பலை நெருங்கினார்.
எனக்கு உதவியதற்கு மிகவும் நன்றி!
ஆனால், எங்கள் பாஸ் உங்களை கப்பலில் அனுமதிக்க வேண்டுமே!
அவரை முதலில் நன்றாக சோதனை போடுங்கள். பிறகு பாஸ்சிடம் சொல்லுவோம்!
ஜேம்ஸ்பாண்டு உடைகளைக் கழற்றினார்.
காலில் என்ன துப்பாக்கி?
கப்பல் மாலுமிகள் பொல்லாதவர்கள். என் பாதுகாப்புக்காக!

ஜேம்ஸ் திடீர் பாய்ச்சல்!
ஆ...!
மூச்சுவிடக் கூடாது!
உன் மூச்சை நிறுத்தி விடுவேன்!
திடீர் என்று ஒரு குரல் கேட்டது!
அபாரம், ஜேம்ஸ்! உன் அதிரடியை நேரில் பார்க்க வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளா ஆசை!

நானும் புலியை அதன் குகையிலேயே சந்திக்கத்தான் காத்திருந்தேன்!
என் குகைக்குள் வந்தவர்கள் உயிருடன் திரும்பிப் போனதில்லை!
நீ கப்பலில் ஏறியது முதலே உன்னை நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!
இங்கே அங்கங்கே எந்திரத் துப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ளன.
ஒன்றைப் பார்க்கிறாயா?

ஜேம்ஸ் மயங்கி விழுந்தார். கைகள் கட்டப்பட்டு, ஒரு அறைக்குக் கொண்டுபோகப்பட்டார்.
நீ குள்ளன் அல்ல! ஆறரை அடி உயரம்!
நான் கள்ளனுக்குள் குள்ளன்!
நீ யார் என்பது எனக்குத் தெரியும். உனக்கு பொய் முடியோ, கையுறையோ தேவையில்லை!
நான் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டாயா?
நாம் மீண்டும் சந்திக்கிறோம், டாக்டர் நோ!
இப்போது நான் எலக்ட்ரானிக் கை வைத்திருக்கிறேன்!

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சருக்குக் குறி வைத்துவிட்டீர்கள் போலிருக்கிறதே!
ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்காவுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் அல்லவா?
அதுபற்றிப் பிறகு பேசுவோம்!
முதலில் உன் தோழியின் கதியைப் பார்!
ஜேம்ஸை அழைத்துப் போனான்.
மீனுக்கு இரையாகப் போட்டிருக்கிறேன்!
பாத்திமா


நீ மொராக்கோவைவிட்டுப் போன ஒரு மணி நேரத்தில் பாத்திமாவைப் பிடித்துவிட்டேன்!
என் கேள்விகளுக்கு நீ சரியாகப் பதில் சொன்னால், அவனது உயிரைக் காப்பாற்ற முடியும்!
அப்போது ஒரு குரல் கேட்டது.
பாஸ்... உங்களுக்கு ஒரு அவசரச் செய்தி.

திட்டத்தை செயலாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது!
செய்து முடியுங்கள்!
என்னோடு வா, ஜேம்ஸ்.
கப்பல் மேல்தளத்தில் என்ன நடக்கிறது என்று பார்!
கப்பலின் மேல்தளத்துக்கு வந்தார்கள்.

விஞ்ஞானி ஜான்சன் சூரிய ஒளியை மின்சக்தியாக மாற்றும் நிபுணர் என்பது உனக்குத் தெரியும், ஜேம்ஸ்!
அவர் இப்போது உன்னிடம் இல்லை என்று சொன்னார்களே?
ஜான்சன் வந்தார்.
ஓ! இங்கேதான் இருக்கிறாரா?
இவர் லண்டன் இரகசிய போலீஸ் 007 ஆயிற்றே!
அதனால் என்ன? உயிரோடு திரும்பப் போவதில்லையே!
இவையெல்லாம் ஜான்சன் அமைத்த கருவிகள்!


வெயில் மின்சாரமாக மாற்றப்படுகிறது.
அது மின்கதிராக மீண்டும் வானில் செலுத்தப்படும்! அந்த மின்கதிர் 2500 பாரன்கீட் டிகிரி சக்தி படைத்தது.
ஒரு கணினியின் உதவியால் அது பாய்ச்சப்படும்.
ஒரு கப்பல் மீது பாய்ச்சப் படுகிறது பார்!
கப்பல் திப்பிடித்து எரிகிறது!

உனது அடுத்த குறி, ஈராக் போருக்கு ஆதரவு திரட்டப்போகும் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரின் விமானத்தின் மீது! அப்படித்தானே?
நீ புத்திசாலி! கண்டுபிடித்து விட்டாய்!!
அந்த விமானம் எப்போது வருகிறது, ஜான்சன்?
இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் நமது வட்டத்துக்குள் வந்துசேரும்!
எல்லாம் தயாராகட்டும்!
அமெரிக்க அமைச்சரை வீழ்த்திவிட்டால், நமக்கு கோடிக் கணக்கான டாலர் கிடைக்கும்!
பாஸ்! ஜேம்ஸ்பாண்டு ஓடுகிறார்!

அவனைப் பிடியுங்கள் !
ஜேம்ஸ் ஒரே பாய்ச்சல்!
ஜேம்ஸ் கடலில் குதித்தார்!
சுடு... அவனை சுட்டுக் கொல்!
டுமீல்... டுமீல்...
அதற்குள் ஜேம்ஸ்பாண்டு தண்ணீரில் மூழ்கி, துப்பாக்கிக் குண்டுக்கு எட்டாத தூரம் போய்விட்டார்!

கடலில் குதித்துத் தேடலாமா?
அதற்கு நேரமில்லை! மீன் தொட்டியிலிருந்து சுறா மீன்களைத் திறந்துவிடுங்கள், அவனைத் தின்று தீர்க்கட்டும்!
ஜேம்ஸ்பாண்டு கடல்படைக் கப்பலுக்கு (நீர்மூழ்கிக் கப்பல்) வந்து சேர்ந்தார்.
ஒரு நிமிடம் பிந்தியிருந்தாலும், சுறா மீன்கள் என்னைத் தின்றிருக்கும்!
விமானம் நமது ராடார் எல்லைக்குள் வந்துவிட்டது!


அந்த எண்ணெய்க் கப்பலை உடனே தாக்க வேண்டும்!
அதற்குக் கப்பல் படை தளபதியிடமிருந்து ஆணை வரவேண்டும்!
எண்ணெய்க் கப்பலில் ராடார் ஏன்? மின்கதிர்வீச்சுக் கருவி ஏன்? என்று கேட்டு, கப்பலைத் தடுத்து நிறுத்தலாம் அல்லவா?
அது வேண்டுமானால் செய்யலாம்!
நமது கப்பல் அடியில் பதுக்கி வைத்த எனது ஹெலிகாப்டரை எடுங்கள்!
அதேநேரம்
கமாண்டர், ஒரு ரேடியோ செய்தி.
நமது கப்பலை நிறுத்தச் சொல்லி, பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல் ஆணையிட்டிருக்கிறது.


என்ன செய்வது பாஸ்?
கப்பல் போகட்டும்! நீர்மூழ்கிக் கப்பலுடன் ரேடியோவில் பேசி நேரத்தைக் கடத்துங்கள். அதற்குள் நமது வேலை முடிந்துவிடும்!
இரு கப்பல்களின் தளபதிகளும் பேசிக்கொண்டிருந்த நேரத்தில்...
விமானம் நமது தாக்குதல் எல்லைக்குள் வந்துவிட்டது, பாஸ்!
இன்னும் ஐந்தே நிமிடம்... மின்கதிர் மின்னல் வேகத்தில் பாய்ந்துவிடும்!

அதேநேரம் ஜேம்ஸ்பாண்டு பறந்தார்.
அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் பறந்து கொண்டிருந்தார்.
மாண்புமிகு அமைச்சர் அவர்களே! உங்களுக்கு ஒரு அவசர அழைப்பு. கேப்டன் கேபினுக்கு அழைக்கிறார்!
அமைச்சர் கேபினுக்குள் வந்தார்.
என்ன செய்தி கேப்டன்?


இப்போது லண்டன் இரகசியப் போலீசாரிடமிருந்து செய்தி வந்தது.
எந்த நேரமும் இந்த விமானம் தாக்கப்படக்கூடும் என்றார்கள்!
இது வெறும் மிரட்டல்! ஈராக்கின் பிரசார தந்திரம்!
எனக்குப் பயணிகளின் உயிர் முக்கியம். விமானத்தைத் திருப்புகிறேன்!
விமானம் திரும்பிப் போகிறது
நமது தாக்குதல் பற்றி யாரோ தகவல் கொடுத்திருக்க வேண்டும்!
யாரோ அல்ல. ஜேம்ஸ்பாண்டுதான்! அவனை முதலில் தீர்த்துக்கட்ட வேண்டும்!

பாஸ்! பிரிட்டீஷ் நீர்மூழ்கிக் கப்பல், ராடாரில் தெரிகிறது!

பாத்திமாவைக் கொண்டு வாருங்கள்!


அவளை மீட்க நீர்மூழ்கிக் கப்பலில் ஜேம்ஸ் வருவான்! அப்போது மின்கதிரைப் பாய்ச்சிக் கொளுத்துங்கள்!


பாத்திமா கப்பல் தளத்துக்குக் கொண்டுவரப்பட்டாள்!
அ...அதோ...


ஜேம்ஸ் பறந்து வந்தார்.
ஜேம்ஸ்...!

பாத்திமாவைத் தூக்கிக்கொண்டு பறந்தார்!

பிடியுங்கள் !
டுமீல் !
சுடுங்கள் ! அவனைச் சுட்டுக் கொல்லுங்கள் !
ஜான்சன் ! நீர்மூழ்கிக் கப்பல் மீது மின்காந்தம் பாயட்டும் !

இருவரும் பறந்தார்கள்.
ஜேம்ஸ்! உங்களுக்குக் காயமா?
பெரிய காயம் ஒன்றுமில்லை!
சூரிய சக்தி சேர்த்து வைக்கப்படும் தொட்டியை ஜேம்ஸ் சுட்டார்!
டுமீல்...!
எண்ணெய்க் கப்பல் தீப்பிடித்து எரிந்தது!





ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

இளம் இயக்குநர்கள்!

"இப்போதைய சிறுவர்கள் பிஞ்சிலேயே பழுத்துவிடுகிறார்கள்" என்பார்கள். ஆனால் அவர்கள் முளையிலேயே சாதிக்கவும் செய்கிறார்கள். படங்களைப் பார்ப்பது மட்டுமில்லை; இயக்கவும் செய்கிறார்கள்.



சௌரியா கஸ்தூரி என்ற 14 வயது சிறுவன் "மூன்று விருப்பங்கள்" என்ற வீடியோ படத்தை எடுத்தான். இது, அமெரிக்காவில் தங்கப் பதக்கம் வென்றது.



சங்கரன் என்ற 8 வயது சிறுவன், "வெளியே சென்ற ஆமை" என்ற வீடியோ படம் இயக்கினான். அந்தப் படத்துக்கு வெள்ளிப் பதக்கம் பரிசு கிடைத்தது.

இந்த இளம் இயக்குநர்கள் இருவரும் கேரள மாணவர்கள்!


அடுத்த
காமிக்ஸ்
Cowboy story
பாலைவனக் கொள்ளையர்
வண்ணப் படக்கதை
விறுவிறுப்பான வீர சாகசக் கதை
ஜூன் 16-ந்தேதி வெளிவருகிறது!
“ராணி காமிக்ஸ்”, சென்னை-600 007.

Regd with the Registrar of Newspaper for India under No. 42576/84 - ISSN 0971-8567

June 1, 2003.

RANI COMICS (TAMIL FORTNIGHTLY)